
சோபக்ருத் ௵ வைகாசி ௴
மே - ஜூன் 2023

மலர்: 6
இதழ்: 2

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்






MONTHLY NEWSLETTER FROM:

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM


MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com







வருஷப் பிறப்பு உத்ஸவம்





சோபக்ருத் ௵ வைகாசி மீ
மே - ஜூன் 2023

மலர்: 6
இதழ்: 2

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

ஆறாம் ஆண்டு தொடக்க சிறப்பு இதழ்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, Thillai Ranganathan, P.S. Anand & N.V. Narayanan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

நிகழும் சோபக்ருத் வருஷத்துக்கு ஒரு சிறப்பு உண்டு. ஆசார்ய வள்ளல் மயிலையில் அர்ச்சையாய் எழுந்தருளியிருக்கும் ஸன்னிதியில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் திரு அவதாரம் செய்த நூறாவது ஆண்டுத் தொடக்கம் என்பதுதான் அது.

பக்தர்களுக்கு ஒரு வழக்கம். தன் இஷ்ட தேவதை இவ்வுலகில் பலகாலம் வீற்றிருந்து அருள்புரியவேணும் என்பதை ப்ரார்த்திப்பது ‘‘ஒரு நூற்றாண்டு இரும்’’ எனவாக. ஒரு நூற்றாண்டுதான் கழிந்து விட்டதே என ஆறியிருப்பதற்கு, இது என்ன விபவாவதாரமா? ஆகவே ‘‘இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்’’ எனவாக வேண்ட இடமளிப்பது, இந்த வருடம்.

இதனை ஒவ்வொரு மாதமும் சிறப்புற கொண்டாட வேணும் என்ற ஆஸ்திகர்களின் உள்ளக்கிடக்கையை உணர்ந்த கோயில் நிர்வாகிகள், வருடம் வருவதற்கு முன்னரே, திருத்தெப்போத்ஸவம் நடத்தி அநுபவித்தனர். வருடம் பிறந்தவுடன், நான்கு நாட்கள் வேத விற்பன்னர்களைக் கொண்டு ‘‘கன பாராயண’’ மும்; அதனைத் தொடர்ந்து இருதின லக்ஷார்ச்சனையும் செய்வித்தனர்.

அதில் சிறப்பு அம்சமாக அமைந்தது, இரண்டாம் நாள் பரமஹம்ஸேத்யாதி வெண்ணாற்றங்கரை ஆண்டவன் மங்களாசாஸனத்துக்காக எழுந்தருளி அர்ச்சனையை பூர்த்திசெய்வித்ததுதான். மயிலைவாழ் பாகவதர்கள் வாழ்வெய்தினர். இதனைத் தொடர்ந்து வைகாசியில் திவ்யதம்பதிகளுக்கு விசேஷ திருக்கல்யாணம் நடைபெறப்போவதாக நிர்வாஹிகள் அறிவித்திருக்கின்றனர்.

இப்படி விசேஷ உத்ஸவங்களின் கோலாஹலத்தில், வழக்கமான விழாக்கள் மறக்கப் படவில்லை. சித்திரையில், வருஷப்பிறப்பு, தர்சனஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரர் வார்ஷிகோத்ஸவம் (10 தினங்கள்), அக்ஷய த்ருதீயை, எம்பெருமானின் திருவவதார உத்ஸவம், ஸ்ரீ மதுரகவி ஆழ்வார் வார்ஷிகோத்ஸவம், சித்ரா பௌர்ணமி, கடை வெள்ளிக்கிழமை என உத்ஸவ ஆவளிதான். இவற்றின் வண்ணப்படத் தொகுப்பை இந்த ஸஞ்சிகையில் காணலாம்.

வழக்கமான தொடர்களுடன் சிறப்புக் கட்டுரைகளுடனும் வைகாசி மாத இதழ் இதோ உங்கள் கைகளில். ❊

ஸ்ரீ:

# Laksharchanai First Up… The Countdown Begins

## FROM THE DESK OF TRUSTEES

Desika Sandesam stepped into its sixth year with the gracious presence, Anugrahabhashanam and release of the newsletter by Srirangam Srimath Andavan Sri Varaha Mahadeskikan at a special function held at the Devasthanam premises on 18.04.2023. The Editorial Board members, article contributors, donors, printers and photographers were honoured in a befitting manner on the occasion for their excellent contribution over the last five years.

Sri Sridhar Parthasarathy, an ardent devotee of our temple, donated a Golden Hastham studded with the words ‘Maam Ekam Saranam Vraja’ in diamond, along with a Pendant which were offered to the temple by Srimath Andavan at the above function. Earlier in the evening, Srimath Andavan performed Mangalaasaasanam at the temple and a special honour was accorded to the Acharyan.

While the previous year Subhakruth signed off with a Float Festival for the first time for Lord Srinivasa at a Madipakkam Lake, the new-born Sobhakruth year is ushering in a series of festivals. A two-day Special Laksharchanai to the Divya Dhampathis set the ball rolling for the year of completion of 100 years of consecration of the Divya Dampathis. On the concluding day, Sri Poundareekapuram Srimath Srinivasagopala Mahadesikan performed Mangalaasaasanam and delivered an Anugrahabhashanam wishing good health, prosperity and peace to one and all. Archakas from several Divyadesams, along with those from our temple, participated in the Kainkaryam, and received the Devasthanam honours. It may be mentioned here that there was a special garland Maryadai for our Peyazhwar and Swami Desikan from Lord Varadaraja of Kanchi on this occasion. Our sincere thanks to all the Archakas, temple staff and other Kainkaryaparas and donors for making it a grand event.

The Devasthanam has proposed to celebrate the Centenary Year by conducting different festivals every month around the star Hastham. Accordingly, Thirukalyana Utsavam to the Divya Dhampathis is slated to be held in Vaikasi.



During the last month, the 10-day Bhashyakarar Utsavam, three-day Vasantha Utsavam, Thiru Avathara Utsavam, Madhurakavi Azhwar Satrumurai, Sri Nrusimha Jayanthi, Chitra Pournami, Sravanam and Kadai Velli Utsavam were held with devotional fervour. As has been the custom, Perumal and Swami Desikan were taken on a procession to Alarmelmangapuram and Desika Bhavanam on the Akshaya Thruthiyai day, and Perumal was hosted at T. Nagar on the Chitra Pournami day.

The grand Brahmotsavam is scheduled to commence on May 22 and will conclude on May 31. The other important festivals in Vaikasi are the Nammazhwar Satrumurai on June 2 and Thotta Utsavam on June 10. ❇

ஸ்ரீ:

# ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஸ்தோத்ரம்

(சேங்காலிபுரம் ப்ரஹ்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் இயற்றி, ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தின் 1975-ம் ஆண்டு ஸம்ப்ரோக்ஷண மலரில் வெளிவந்த வ்யாஸம்)

திருப்பதியைப்போல் மயிலாப்பூரிலும் ஸ்ரீதேசிகருடைய ஸந்நிதியில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள்விளங்குகிறார். இங்கு பல லக்ஷம் ஸ்ரீமான்கள் ஆபரணங்கள் முதலியவைகளை ஸ்ரீபெருமாளுக்கு அர்ப்பணம் செய்து இருக்கின்றனர். இங்கு தர்சனம் செய்பவர்கள் எல்லாம் கோடீச்வரர்களாகவே ஆவார்கள். ஸ்ரீதேசிகருடைய ஸந்நிதியும் ஸ்ரீபட்டாபிராமனுடைய ஸன்னிதியும் சேர்ந்து ஸ்ரீவைகுண்டம் போல் விளங்குகிறது. இங்கு நித்ய ஆராதனம், உத்ஸவங்கள், சாஸ்த்ர முறைப்படி நடந்து வருகிறது. இந்த ஸ்தோத்ரத்தை படிப்பதால் ஸம்பத், ஸந்தானம், ஆரோக்யம், வியாபார லாபம், உத்யோக லாபம், வித்யா லாபம் முதலியன உண்டாகும்.

1. *ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம் – தேசிகேந்த்ரோபரிந்யஸ்த காருண்ய நேத்ரம்!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

*கல்யாணதானைக தீக்ஷம் – கல்பிதாநேக ஸம்ஸாரி ஸம்ஸார மோக்ஷம்!*

*கல்பத்ருஸங்காச வீக்ஷம் – கண்டிதாநேக தைத்யாதி துஷ்டாரி பக்ஷம்!!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நான் ஸேவிக்கிறேன், தேசிகரின் மீது அளிக்கப்பட்ட கருணை நிரம்பிய கடாக்ஷத்தை உடையவரான ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நான் ஸேவிக்கிறேன்.

மங்களங்களை அளிப்பதையே முக்கிய தீக்ஷையாகக் கொண்டவரும், பல ஸம்ஸாரிகளை ஜனன மரண துக்கத்திலிருந்து விடுவித்தவரும், கல்ப விருக்ஷத்திற்கொப்பான கடைக்கண் பார்வையை உடையவரும், பல அசுரர்கள் முதலிய துஷ்டர்களான சத்ருக்களின் கூட்டத்தைக் கொன்றவருமான ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நான் ஸேவிக்கிறேன்.

2. *நித்யம் ச்ரியாச்லிஷட காத்ரம் – பக்தப்ருந்தார்பிதானேக புஷ்பாதி சித்ரம்!*

*காருண்ய ஸம்பூர்ண நேத்ரம் – கஞ்சபுஷ்பாப வக்த்ரம் கலௌ காமதம் தம்!!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

தினந்தோறும் மஹாலக்ஷ்மியால் ஆலிங்கனம் செய்யப்பட்ட திருமேனியை உடையவரும், பக்த கூட்டங்கள் அளித்த புஷ்பங்களால் மிக ஆச்சர்யகரமாய் விளங்குகிறவரும், பூர்ண கருணையுள்ள கண்களை உடையவரும், தாமரை மலர் போன்ற முகமுள்ளவரும், கலியுகத்திலும் விருப்பத்தை அளிக்கிறவருமான அந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நான் ஸேவிக்கிறேன்.

3. *வஸந்தம் மயூராக்ய புர்யாம் – ஸாதுரத்னோப ஸங்க்லுப்த பூஷாஜ்வலந்தம்!*

*ஸௌக்யம் ச்ரிதேப்யோ திசந்தம் – நித்யஸேவார்த்தி ஸம்பூர்ண திவ்யாலயம் தம்!!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

மயிலாப்பூரில் இருப்பவரும், சிறந்த ரத்னங்கள் இழைத்த ஆபரணங்களால் விளங்குகிறவரும், தன்னை அண்டினவர்களுக்கு ஸுகத்தை அளிப்பவரும், நித்யம் வரும் ஸேவார்த்திகளால் நிறைந்த திவ்யமான கோவிலைக் கொண்டவருமான அந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நான் ஸேவிக்கிறேன்.

4. *ஸ்ரீமத்பிராராதிதாங்க்ரிம் – சுத்த பீதாம்பராகல்ப காந்த்யா லஸந்தம்!*

*ஸ்ரீபூமிதேவீ ப்ரியம் தம் – தீநஸம்ரக்ஷணார்த்தம் லஸத் சங்க சக்ரம்!!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

தனவான்களால் பூஜிக்கப்பட்ட சரணங்களை உடையவரும், சுத்தமான பீதாம்பரம் ஆபரணங்கள் இவற்றின் காந்தியோடு விளங்குகிறவரும், ஸ்ரீதேவி பூமிதேவி இவர்களுக்குப் பதியும், தீனர்களைக் காக்கவேண்டி, சங்கம், சக்ரம் இவைகளைத் தரித்துக் கொண்டிருப்பவருமான ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நான் ஸேவிக்கிறேன்

5. *பட்டாபிராமாத்யுபேதம் – பாதஸேவார்த்தி பக்தௌக தத்தாகிலார்த்தம்!*

*பத்மாவதீ ப்ரேமபாத்ரம் – புத்ரபௌத்ராதி ஸம்பத்ப்ரதாக்யா சரித்ரம்!!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)


பட்டாபிஷேக கோலமாய் விளங்கும் ஸ்ரீராமன் முதலிய ஸந்நிதியோடு கூடியவரும், பாதஸேவையை விரும்பி வரும் பக்த கூட்டங்களுக்கு எல்லா புருஷார்த்தங்களையும் அளிப்பவரும், ஸ்ரீபத்மாவதீ தேவியின் அன்பிற்குப் பாத்திரமானவரும், புத்ரன் பௌத்ரன் முதலிய ஸம்பத்துக்களை அளிக்கும் பெயர், சரித்திரம் இவைகளை உடயவருமான ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நான் ஸேவிக்கிறேன்.

6. *யேநோத்தமாங்கே கிரீடம் – ரத்ன ஜாலோப க்லுப்தம் த்ருதம் வர்மசித்ரம்!*

*கட்யாம் லஸத்பீத வஸ்த்ரம் ஊர்த்வபுண்ட்ரம்* லலாடே ஸுரத்னம் ச கண்டே!!

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

ஸ்ரீ:



தலையில் கிரீடத்தையும், பலரத்னங்கள் இழைத்த ஆச்சர்யகரமான கவசத்தையும், இடுப்பில் பீதாம்பரத்தையும், நெற்றியில் ஊர்த்வ புண்ட்ரத்தையும், கழுத்தில் கௌஸ்துபமென்ற மணியையும் தரித்துக்கொண்டு விளங்கும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நான் ஸேவிக்கிறேன்.

7. *மாம் பாஹி விஷ்ணோ நமஸ்தே – ஸ்ரீநிவாஸப்ரபோ*
*புத்ர பௌத்ராதி பந்தூந்!*
*ஸர்வான் ஜநாம்ச்சாபி நித்யம் பாதமூலம் ப்ரபத்யே*
*பரம் யோகிவந்த்யம்!!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

ஹே, விஷ்ணோ! தங்களுக்கு நமஸ்காரம். என் பிரபுவான ஓ ஸ்ரீ ஸ்ரீநிவாஸ! என்னையும், புத்ரன் பௌத்ரன் முதலிய பந்துக்களையும் எல்லா ஜனங்களையும் காக்கவேண்டும். தினந்தோறும் யோகிகளால் நமஸ்கரிக்கத் தகுந்த சிறந்த திருவடிகளை சரணமடைகிறேன்.

8. *ரோகார்தி ஹாரின் நமஸ்தே – ராஜ்ய லாபாதி*
*தாயின் மமாநாத மாயிந்!*
*ரத்னாதிஹாரின் நமஸ்தே – ரம்ய பத்மாவதீயுக்த*
*கல்யாண காரிந் !!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

ரோகம், மனக்கவலை இவைகளைப் போக்குகிறவரே, தங்களுக்கு நமஸ்காரம். ராஜ்ய லாபம் முதலியவைகளை அளிப்பவரும், லக்ஷ்மியின் பதியும், மாயாவியும், ரத்னம் முதலிய ஹாரங்களை தரித்துக் கொண்டிருப்பவரும், மங்களங்களை அளிக்கிறவருமான தங்களுக்கு நமஸ்காரம்.

9. *நித்யம் வ்ருஷாத்ரௌ யதாத்வம் – ஸேவமாநாந்*
*ஸதா பாஸி ஸாதூம்ஸ்ததா த்வம்!*
*அத்ரா கதாம்ச்சாபி ஸர்வாந் – ஸாது பாஹீதி*
*யாசே நமன் பாதபத்மே!!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

தாங்கள் எவ்விதம் வ்ருஷகிரி (திருப்பதி)யில் இருந்துகொண்டு தன்னை சேவிக்கும் ஸாதுக்களை தினந்தோறும் ரக்ஷிக்கிறீரோ அவ்விதம் இங்கு (மயிலையில் உள்ள ஸந்நிதிக்கு) வரும் யாவரையும் நன்கு காக்கவேண்டும் என்று தங்கள் பாத கமலங்களில் நமஸ்கரித்துக் கொண்டு வேண்டுகிறேன்.

10. *ஸ்தோத்ரம் க்ருதம் பக்திரம்யம் –*
*தீக்ஷிதாநந்தராமேணே ஸர்வார்த்த ஸித்யை!*
*நித்யம் படேத் யஸ்து பக்த்யா – ஸ்ரீநிவாஸோ*
*விதத்யாத் ஸதா தஸ்ய ஸித்திம்!!*

(ஸ்ரீ ஸ்ரீநிவாஸம் பஜேஹம்)

எல்லா புருஷார்த்தங்களையும் அடைய வேண்டி பக்தியால் அழகிய இந்த ஸ்தோத்ரமானது அனந்தராம தீக்ஷிதரால் செய்யப்பட்டது. இந்த ஸ்தோத்திரத்தை எவன் தினந்தோறும் பக்தியுடன் படிக்கிறானோ அவனுக்கு ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் எல்லா ஸித்தியையும் எப்பொழுதும் அளிப்பார். ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நான் ஸேவிக்கிறேன்.

# சோபக்ருத் வருட வைகாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| மே / ஜூன் | வைகாசி | | | | | |
| 15/05/2023 | 1 | ஏகாதசி | திங்கள் | பூரட்டாதி | மாதப்பிறப்பு | |
| 16/05/2023 | 2 | த்வாதசி | செவ்வாய் | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 17/05/2023 | 3 | த்ரயோதசி | புதன் | ரேவதி | திருமால்வடை | |
| 18/05/2023 | 4 | சதுர்தசி | வியாழன் | அச்வினி | திருமால்வடை | |
| 04/06/2023 | 21 | பௌர்ணமி / ப்ரதமை | ஞாயிறு | கேட்டை | காலை பெருமாள் திருமஞ் ஜனம். மாலை வீதி புறப்பாடு | ஸ்ரீ S. அருண் |
| 05/06/2023 | 22 | ப்ரதமை / த்விதீயை | திங்கள் | மூலம் | திருமால்வடை | |
| 06/06/2023 | 23 | த்விதீயை / த்ருதீயை | செவ்வாய் | பூராடம் | ஸ்ரீ ஸேனைநாதன் | |
| 07/06/2023 | 24 | சதுர்த்தி | புதன் | உத்தராடம் | ஸ்ரீ ஆளவந்தார் | |
| 08/06/2023 | 25 | பஞ்சமி | வியாழன் | ச்ரவணம் | காலை பெருமாள், ஸ்வாமி தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதி புறப்பாடு ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ T.E. ஸ்ரீநிவாஸன் |
| 09/06/2023 | 26 | ஷஷ்டி | வெள்ளி | அவிட்டம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ ஸ்ரீராமன் |
| 10/06/2023 | 27 | ஸப்தமி | சனி | சதயம் | தோட்ட உத்ஸவம். பெருமாள் ஆழ்வார்பேட்டை ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம் எழுந்தருளல் | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் (பதிவு) |
| 11/06/2023 | 28 | அஷ்டமி | ஞாயிறு | பூரட்டாதி | திருமால்வடை | |
| 12/06/2023 | 29 | நவமி | திங்கள் | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 13/06/2023 | 30 | தசமி | செவ்வாய் | ரேவதி | திருமால்வடை | |
| 14/06/2023 | 31 | ஏகாதசி | புதன் | அச்வினி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ K. வரதராஜன் |
| 15/06/2023 | 32 | த்வாதசி | வியாழன் | பரணி | ஷடசீதி புண்யகாலம். ஆனி மாதப்பிறப்பு. காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு. | ஸ்ரீ M.V. ஸ்ரீநிவாஸன் குடும்பத்தார். C/o. ஸ்ரீ S. நாராயணன் |

**குறிப்பு:** மே 22 (திங்கள்) முதல் 31 (புதன்) வரை ப்ரஹ்மோத்ஸவம் – பத்ரிகை 14, 15 பக்கங்களில்

ஶ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (2)

## Anushtaanam Crying For Attention And Observance

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

It is a heart-warming fact that devotion to and faith in God and the awareness levels of our people in religious matters have soared in the last two decades or so, thanks to exposure to discourses, mass media programmes, etc. However, there is also this disturbing trend that orthodoxy or adherence to and following the basic tenets of our Sampradaya has taken a downswing during the corresponding time. In other words, theory has thrived and practice has plummeted.

Knowledge is of little value if it is not taken to its logical end through application. Seeing and realising that the tree bears fruits that are sweet is knowledge. But unless one makes an attempt and succeeds in plucking and eats them, he cannot experience and enjoy the sweetness. So, mere knowledge is no substitute for experience; awareness has to be capped by achievement through application, to make any meaning.

In this context, it is an encouraging sign that these days, a lot of parents prefer to perform the Upanayanam to their ward at a reasonably young age. But on the flip side, in most cases, little is done to make sure that the boy learns and performs Sandhya Vandanam properly and unfailingly. It has become something like disposing of one's duty, without understanding the purpose or following the rule.

We shall call the awareness-devotion-faith as 'Asthikam' and the practical part as 'Anushtaanam', for easy understanding. We shall bifurcate a few specifics that need to be followed under the above heads.

| List-A: Asthikam-based deeds | List-B: Anushtaanam-based deeds |
|---|---|
| • Samasrayanam, Saranaagathi | • Wearing the Thiruman(s) |
| • Bhagavath, Bhagavatha, Acharya Kainkaryams | • Swaroopam/attire |
| • Visiting temples/Undertaking pilgrimage | • Thrikaala Sandhya Vandanam |
| • Learning the Vedas and Azhwars/Acharyas' works | • Nithya Bhagavath Aaraadhanam |
| • Listening to discourses | • Not worshipping other deities |
| • Reading divine works | • Not eating unorthodox/outside food |
| | • Pariseshanam |
| | • Tharpanam, Sradhdham, wherever applicable |

It is discernible from the above, that there is a sea of difference in disposition. While the state of affairs of those under List-A offers immense satisfaction, the situation is far from ideal with respect to the contents of List-B.

It would appear that the reason for this slip up in Anushtaanam is that people are at a cultural crossroads. Too many factors have combined and contrived to contribute to this situation. Impact of alien lifestyle, comforts of technology, constant hunt for wealth, peer pressure, competition for everything, harmful food habits, perennial tension on various fronts and health problems may be cited as some of the reasons.

It is against this backdrop and these odds that one finds himself today. Anushtaanam is a casualty as people run around in circles, competing with the clock all the time. In a stark deviation, table dining, servant maid upto the kitchen, luxuries on loan, party for everything, mindless outside food, among others, have become the order of the day.

Things wouldn't have deteriorated to this level if only faith had been shown in the Andal's adage "மேலையார் செய்வனகள் வேண்டுவன" and predecessors' footsteps followed in Srivaishnava households. That would have ensured that the Anushtaanams and values were at least kept in tact, if not improved upon over generations. So much of dilution wouldn't have resulted in.

Uncharitable it would be to blame it entirely on people for this scenario. It is a combination of inflicted and invited trouble. There must be a conscious effort to wriggle out of this vicious circle and march ahead in the right direction. Prioritising our wish-list to suit our Anushtaanam and pursuing calmly and earnestly to achieve them is the need of the hour.

Any facility/resource has two sides to it – constructive as well as destructive. To cite common examples, knife, fire, water, television, credit card, computer, electricity, and so on. The key is how one makes use of these. Prudence would demand that we polish off the constructive side and use it to our advantage.

Happiness, health and wealth are the most coveted values of life and are equally important. One should not be sacrificed for the sake of the other(s). The tenets of our Sampradaya have been so designed by our Acharyas to optimise these values seamlessly, just by loyally adhering to the path of Anushtaanam.

Let us all make a little reflection and some concerted effort to optimise them our Sampradaya way, with due importance to Anushtaanam.

*(to be continued…)*

## வைகாசியில் முக்கிய உத்ஸவங்கள்

| | |
|---|---|
| **ஸ்ரீ ஶ்ரீநிவாஸப் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்** (10 நாட்கள்)<br>மே 22 (திங்கள்) முதல் 31 (புதன்) வரை<br>**கருட ஸேவை:** மே 24 (புதன்)<br>**யானை வாஹனம்:** மே 27 (சனி)<br>**திருத்தேர்:** மே 28 (ஞாயிறு)<br>**தீர்த்தவாரி:** மே 30 (செவ்வாய்) | **நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்**<br>ஜூன் 2 (வெள்ளி) |
| | **ச்ரவணம்**<br>ஜூன் 8 (வியாழன்) |
| **விடாயாற்றி உத்ஸவம்** (3 நாட்கள்)<br>ஜூன் 1 (வியாழன்) முதல் 3 (சனி) வரை<br>**புஷ்ப பல்லக்கு:** ஜூன் 3 | **தோட்ட உத்ஸவம்**<br>ஜூன் 10 (சனி) |


### ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும்**
**விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு, மயிலாப்பூர்,
சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.







## தேஶிக ஸந்தேஶம் விழா

















## தேஶிக ஸந்தேஶம் விழா

















## தேஸிக ஸந்தேஸம் விழா











## அக்ஷய த்ருதீயை








ஸ்ரீ:

கண்ணுக்கினியன







ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் திரு அவதார உத்ஸவம்





ஸ்ரீ:

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

4, கேசவப்பெருமாள் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004

☎ 2495 3799 ★ Email:svdd.mylai@gmail.com ★ Website: www.svdd.com

## திருமயிலை திருவேங்கடமுடையான்
## சோபக்ருத் வருஷத்திய ப்ரஹ்மோத்ஸவ பத்திரிகை

**22.05.2023 முதல் 31.05.2023 வரை / வைகாசி 8 முதல் 17ம் தேதி வரை**



ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது சோபக்ருத் வருஷம் வைகாசி மாதம் 8ம் தேதி (22.05.2023) திங்கட்கிழமை முதல் ப்ரஹ்மோத்ஸவம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருப்பதால், அம்மஹோத்ஸவத்தில் ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் கைங்கர்யபரர்களாயிருந்து திருமயிலை ஸ்ரீதிருவேங்கடமுடையானுடைய க்ருபைக்கு பாத்திரர்களாக ப்ரார்த்திக்கிறோம்.

R.ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன் - தர்மகர்த்தாக்கள்

ஸ்ரீ:

| நாள் | நேரம் | உற்சவ விவரம் மற்றும் உபயதாரர் |
|---|---|---|
| 19.05.23 (வெள்ளி) | இரவு 8 மணி | **செல்வர் உத்ஸவம்**<br>உபயம்: D.N.S Family |
| 20.05.23 (சனி) | இரவு 7 மணி | **அங்குரார்ப்பணம் - ம்ருத்ஸங்க்ரஹணம் (சேனைநாதன் புறப்பாடு)**<br>உபயம்: ஸ்ரீ. N. சேஷாத்ரி |
| 21.05.23 (ஞாயிறு) | இரவு 7 மணி | **அதிவாஸம் - த்வஜபடம் வீதி புறப்பாடு**<br>**த்வஜபட கருட ப்ரதிஷ்டை** உபயம்: ஸ்ரீ. A.L. ரங்கமணி |
| 22.05.23 (திங்கள்) | காலை<br><br>காலை 6.30 மணி<br>இரவு 8 மணி | **த்வஜாரோஹணம்** உபயம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தான அர்ச்சகர்கள்<br>*(காலை 4.00 - 5.00 மணி மேஷ லக்னம்)*<br>**பவழக்கால் சப்பரம்** உபயம்: ஸ்ரீ. ரகுபதி & ராம்<br>**ஸிம்ஹ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. K. வேணுகோபாலன் |
| 23.05.23 (செவ்வாய்) | காலை 6.30 மணி<br><br>இரவு 8 மணி | **ஹம்ஸ வாஹனம்** உபயம்: எலக்டோரல் போர்டு<br>திருமஞ்ஜனம் உபயம்: ஸ்ரீ. N.S. வரதாச்சாரியார் குடும்பத்தினர்<br>**ஸூர்யப்ரபை** உபயம்: 1. ஸ்ரீ. N. கஸ்தூரிரங்கன், 2. ஸ்ரீ. மாதவன் சம்பத்<br>3. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன் |
| 24.05.23 (புதன்) | காலை 6.00 மணி<br>இரவு 8 மணி | **தங்க கருட வாஹனம்** உபயம்: ஸ்ரீ. S. வரததேசிகன் குடும்பத்தினர்<br>**ஹனுமந்த வாஹனம்** உபயம்: 1. ஸ்ரீ. R.வாசுதேவன் 2.ஸ்ரீ. C.கோதண்டம்<br>3. ஸ்ரீமதி சீதா ரங்கநாதன் 4. பிள்ளைபாக்கம் நரஸிம்மராகவாச்சாரி ட்ரஸ்ட் |
| 25.05.23 (வியாழன்) | காலை 6.30 மணி<br>இரவு 8 மணி | **சேஷ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. M.D. சுதர்சனம் ஐயங்கார் ட்ரஸ்ட்<br>**சந்திர ப்ரபை** உபயம்: M/s. சுந்தரம் சாரிடீஸ் |
| 26.05.23 (வெள்ளி) | காலை 5.00 மணி<br>இரவு 8 மணி | **நாச்சியார் திருக்கோலம்** உபயம்: ஸ்ரீ. R. முகுந்தன்<br>**யாளி வாஹனம்** உபயம்: ஸ்ரீ. M. கணேசன் |
| 27.05.23 (சனி) | காலை 6.30 மணி<br>இரவு 8 மணி | **வேணுகோபாலன் திருக்கோலம் (சூர்ணாபிஷேகம்)** உபயம்: ஸ்ரீ. V.C. முரளிதரன்<br>**யானை வாஹனம் - (ஏசல்)** உபயம்: ஸ்ரீ. ராகவாச்சாரியார் குடும்பத்தினர் |
| 28.05.23 (ஞாயிறு) | காலை<br><br><br>இரவு 8 மணி | **திருத்தேர்** *காலை 3.30 - 4.30 மணி மேஷ லக்னம்*<br>காலை 7.00 மணிக்கு புறப்பாடு<br>உபயம்: ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு)<br>**தங்கக்கேடயம் (தோட்ட உத்ஸவம்)** உபயம்: ஸ்ரீ. K.ரங்கநாதன் குடும்பத்தினர் |
| 29.05.23 (திங்கள்) | மதியம் 1 மணி<br><br><br>இரவு 8 மணி | **திருப்பாய்ந்தாடு திருமஞ்ஜனம்**<br>உபயம்: 1. ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா<br>2. திருக்கண்ணமங்கை ஸ்ரீ. S. சுந்தரராஜன் ஐயங்கார் பண்டு<br>**குதிரை வாஹனம்** உபயம்: 1. ஒலக்கூர் ஸ்ரீ. ராஜகோபாலன் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி நிர்மலா J. ஸ்ரீநிவாஸன் 3. ஸ்ரீ. K. ராமன் |
| 30.05.23 (செவ்வாய்) | காலை 6.30 மணி<br>மதியம் 12 மணி<br>இரவு 8 மணி | **ஆள்மேல் பல்லக்கு (மட்டையடி மஹோத்ஸவம்)**<br>**தீர்த்தவாரி** உபயம்: 1. ஸ்ரீ. S.R. ஜெகந்நாதன் 2. ஸ்ரீ. T.P. பத்மநாபன்<br>**ஆனந்த நிலைய விமானம்** உபயம்: ஸ்ரீ. T. நாராயணன் & ஸ்ரீ. S. நாராயணன் குடும்பத்தினர் |
| 31.05.23 (புதன்) | காலை 9 மணி<br>மதியம் 1 மணி<br>இரவு 8 மணி<br>இரவு 10 மணி | **திருமஞ்ஜனம்** உபயம்: TCN Trust<br>**த்வாதச ஆராதனம்** உபயம்: ஸ்ரீ. R. கோபாலசாமி ஐயங்கார் பண்டு<br>**வெட்டிவேர் சப்பரம்** உபயம்: வனபோஜனம் ட்ரஸ்ட்<br>**த்வஜ அவரோஹணம்** |
| | | **விடையாற்றி உத்ஸவம்** |
| 01.06.23 (வியாழன்) | மாலை 4.30 மணி | **திருமஞ்ஜனம்** உபயம்: 1.ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் பண்டு<br>(ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர்) 2.ஸ்ரீ. A.G. ஸ்ரீனிவாசன் |
| 02.06.23 (வெள்ளி) | காலை 9.30 மணி | **திருமஞ்ஜனம்** உபயம்: ஸ்ரீ. கௌசிகன் |
| 03.06.23 (சனி) | காலை 9.30 மணி<br>இரவு 7.30 மணி | **திருமஞ்ஜனம்**<br>**புஷ்ப பல்லக்கு** உபயம்: ஸ்ரீ. S. சுந்தரம் |

(பிரதி தினம் காலை 9:30 மணிக்கு திருமஞ்ஜனம், காலை 11 மணிக்கு ததியாராதனை,
மாலை 6:00 மணிக்கு பத்தி உலாத்தல், மாலை 7 மணிக்கு ததியாராதனை நடைபெறும்)

**Note :** Contributions can be made by way of cash or cheque (in favour of Sri Vedantha Desikar Devasthanam)

ஸ்ரீ:





மதுரகவி ஆழ்வார் திருநக்ஷத்ரம்





சித்ரா பௌர்ணமி உத்ஸவம்














## விசேஷ லக்ஷார்ச்சனை



ஸ்ரீ:





## விசேஷ லக்ஷார்ச்சனை











## விசேஷ லக்ஷார்ச்சனை









விசேஷ லக்ஷார்ச்சனை



கடைவெள்ளிக்கிழமை புறப்பாடு





ஸ்ரீ:

# பிள்ளைத்தமிழுக்கு வித்திட்ட பெரியாழ்வார் ⑩

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

சென்ற இதழில் யசோதைப் பிராட்டி கண்ணனைக் காதுகுத்தவும், காதில் திரியிடவும், குழையிடவும் அழைக்கும் அழகைக் கூறும், மாதங்களை எண்ணிக் காதுகுத்துவது போல் பெரியாழ்வார் அந்தாதித் தொடையாக அமைத்துள்ள, கடிப்பிடல் என்ற பதிமூன்று பாசுரங்களில் ஐந்து பாசுரங்கள் வரை அனுபவித்தோம்!

காதுகுத்துகையாகிய திருநாளுக்கு ஆயர்பாடி பெண்களையெல்லாம் அழைக்க அவர்கள் எல்லாரும் கூடியிருக்கிறார்கள். கண்ணனோ எனக் குக் காது நோகும் என்று சொல்லி வரமாட்டேன் என்று ஓடுகின்றான். அவனுக்குப் பிடித்தமான பதார்த்தங்களைக் காட்டி அவனை உடன்படுத்திக் கொண்டு காது பெருக்கின விவரத்தை யசோதை சொல்வதாக இதில் பெரியாழ்வார் அனுபவிக்கிறார். மேலும் பன்னிரண்டு மாதங்களுக்கும் பன்னிரண்டு வ்யூஹாந்தரங்களான கேசவாதி மூர்த்திகள் அபிமானிகள் ஆகையாலே அம்மூர்த்திகளின் பன்னிரண்டு திருநாமங்களையும் முறையாகப் பாசுரங்களிலும் சேர்க்கிறார் பெரியாழ்வார். இவற்றை விரிவாகச் சென்ற இதழில் பார்த்தோம்.

இனி ஆறாம் பாசுரத்தில் கண்ணன், கட்டியணைத்துக் கடிப்பிடத் தொடங்கியபொழுது அழுதான். அந்த அழுகையை நிறுத்த முலை உண்ணச் செய்தாள். அழுகையை நிறுத்தி முலை உண்ணும் பொழுது கடிப்பிடுகிறாள். அப்பொழுது அவன் அழாமலும் எழாமலும் இருப்பதற்காக முன்னொரு சமயம் நடந்த நிகழ்ச்சியை நினைப்பூட்டி அவன் மேன்மையைச் சொல்லித் துதித்து உண்பதில் கவனம் வைக்க வேண்டுகிறாள். பன்னிரு நாமத்தில் ஆறாவது திருநாமமான மதுஸூதனன் என்ற நாமத்தை இட்டு எம்பெருமானை அழைக்கிறார் ஆழ்வார். கூடுதலாக நம்பி என்றும் அழைக்கிறார். குண பூர்ணனே! நீ மண்ணைத் தின்றிருக்கிறாயா என்று நான் பார்க்க விரும்ப, நீயும் திறந்து காட்ட, நான் உன் வாயில் மண் உண்ட சுவடைக் கண்டு, மேலும் உன்னை நன்றாகத் திறக்கச் சொல்ல, நீயும் திறக்க, அங்கு எல்லா உலகங்களையும் கண்டேன். இதென்ன? இது எப்படி செரிக்கும் என என் மனத்தில் அஞ்சி, பிறகு நீ உலகமுண்ட பெருவாயனான மதுசூதனன் அன்றி வேறு யாராக இருக்கும் என அப்போதே தேறினேன். இப்படிப்பட்ட நீ நான் கடிப்பிடும் பொழுது ஆகாசம் வரையிலும் கேட்கும் படி அழுதுவிட்டாயே! இப்படி நீ அழுமளவுக்குக் காதில் புண்ணேதும் இல்லையே! கடிப்பிடும் பொழுது சிறிது காலம் காது மடங்கும் அவ்வளவே! அதைப் பொறுத்துக்கொண்டு ஓடாமலிரு! என் கண்ணனே! கார் முகிலே! கடல் வண்ணா! காவலனே! இப்போது கடிப்பிடலைக் கவனியாது முலை உண்பாயாக என்று யசோதை கண்ணனை அமைதிப்படுத்துவதாக பெரியாழ்வார் பாசுரமிடுகிறார். தொடர்ச்சியாக விளிகளை இறுதியடியில் அடுக்குவது தாய் குழந்தையிடம் கொஞ்சும் இயற்கையான ஸ்வபாவத்தைக் காட்டுவது மிக அழகு!

ஏழாம் பாசுரத்தில் த்ரிவிக்ரமனே! என்று பன்னிருநாமத்தில் ஏழாம் திருநாமத்தால் ஆழ்வார் கண்ணனை விளிக்கிறார். த்ரிவிக்ரமனே! ஒப்பற்ற சிவதனுசை முறித்தவனே! திருவாய்ப்பாடிக்கு பெரும் உபகாரகனே! கொடுத்த முலையையும் வேறு எதையும் வேண்டேன் என்று நீ விரைந்தோடுகின்றாய்! கடிப்பினைச் சரிசெய்ய நான் பின் தொடர்ந்து ஓடிவருகின்றேன்! உன் காதில் நானிட்ட காதணியைக் களைந்து எறிந்தாய்! இந்திரன் வெகுண்டு மேகங்களை ஏவியபொழுது, நீ உவந்து மலையை எடுத்து கல்மழையிலிருந்து எங்களையெல்லாம் ரக்ஷித்துப் பசுக் கூட்டங்களையெல்லாம் மேய்த்தவனே! உன் காதுகளை உன் தலைநிற்காமல் இருந்த சிறு பருவத்திலேயே குத்தி வளர்க்காமல் இருந்துவிட்டேன். இது என்னுடைய குற்றமே அன்றோ என்று யசோதை வருந்துவதாக ஆழ்வார் பாசுரமிடுகிறார்.

எட்டாம் பாசுரத்தை வாமனன் என்கின்ற எட்டாவது திருநாமத்தை இட்டுப் பாடுகிறார். பெரியாழ்வார் இப்பாசுரத்தை கண்ணன் எம்பிரானுக்கும் யசோதைக்குமான உரையாடலாக அமைத்துள்ளார். கண்ணன் யசோதையை நோக்கி, நான் ஒரு ஸமயம் ஏதோ மண் கொஞ்சம் உண்டேன் என்பதற்காக, உண்ட மண் செரிக்காது என்று என்னை வளர்க்கும் அன்பினாலே என் மீது மிக்க சினம் கொண்டு என்னைப் பலவாறு அடித்தாய்! அதோடு நில்லாமல் உன்னை விலக்க வந்த அனைவருக்கும், என்னை விடாமல் பிடித்து, மண் உண்டதை அனைவருக்கும் காட்டினாயல்லவா? ஆதலால் இவையெல்லாம் உன் குற்றமே! இதை நான் சொல்ல வேண்டாம்! உனக்கே தெரியும்! ஆதலால் இப்போது நான் ஓடுவதைக் கண்டு இதை என் குற்றமாகச் சொல்லவேண்டாம்! என்று தொடர்ந்து யசோதையின் மீது குற்றம் சுமத்தினான். யசோதை அவனைத் துதிக்கும் விதமாக வாமனனே! குண பூர்ணனே! இப்படியே உன் காதுகளை நான் திரியிடாமல் விட்டால் அவை தூர்ந்துவிடும். உபகாரகனே! திரியை அணிந்துகொண்டு நேரும் துன்பங்களையெல்லாம் தீர்க்கக் கடவாய்! உனக்கு ஒரு உண்மையை இங்கு உரைக்கிறேன்! திரிதான்

இடப்போகிறேன் கடிப்பினை இடமாட்டேன் என்று இரந்து நிற்பதாகக் காட்டினார். வன்புற்றரவின் பகைக்கொடி என்று பாசுரமிட்டதால் ஒன்றுக்கொன்று பகையான திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவும் கருடனைக் கொடியாகவும் கொண்டிருப்பதைக் காட்டி, உலகத்தில் ஒன்றுக்கொன்று சேராத வஸ்துக்களைச் சேர்த்து நிர்வஹிக்க வல்லவன் என்பதையும் அழகுறக் காட்டினார்.

ஒன்பதாம் பாசுரத்தில் ஸ்ரீதரனே என்று விளிக்கிறார். இதிலும் கண்ணனும் யசோதையும் உரையாடுகிறார்கள். கண்ணன் யசோதையிடம், உண்மையில் மண் உண்டதைச் சொல்வது இருக்கட்டும், நான் வெண்ணெய் உண்ணாமலிருந்த பொழுதும், மேலும் உண்ணவில்லை என்றும் பலமுறைச் சொல்லியும், வாயிலும் ஒரு சுவடும் இல்லாத பொழுதும், சொல்லுவார் சொல்லைக் கேட்டு, வெண்ணெயைக் களாவாடிப் புசித்தவனே என்று அதட்டினாய். அதன்பின் ஓடாதபடி என்னைப் பிடித்துக் கொண்டு, விளிம்புகள் உள்ள உரலோடு சேர்த்து, எல்லோரும் கண்டு தாமோதரன் என்று எள்ளி நகையாடும்படி, கட்டியது உண்டல்லவா? என்று கேட்டான். அதற்கு யசோதை ஸ்ரீதரனே! நான் முன் செய்த தவற்றைச் சொல்லி, அவற்றை நான் ஒப்புக்கொள்வதைக் கண்டு சிரித்து, அங்கேயே நின்றால் எவ்வாறு திரியிடுவது? திரியிடாவிட்டால் காது தூர்ந்துவிடும். எனவே சூழ்ந்து நின்று கொண்டிருக்கும் இப்பெண்கள் பார்த்துச் சிரிக்காதபடி என் கையிலுள்ள திரிகளை தரித்துக்கொள்வாய் என்று பதிலுரைத்து இறைஞ்சுவதாக ஆழ்வார் பாசுரமிடுகிறார். ஸ்ரீதரனே! என்ற விளியில், நீ திரியை அணியாவிட்டால் திருவும் சிரிக்கும் என்ற பொருளை த்வனிக்க வைத்தது அழகோ அழகு!

பத்தாம் பாசுரத்திலும் ஓர் உரையாடலை இடுகிறார். இதில் பத்தாம் திருநாமமான இருடீகேசனே! என்று விளிக்கிறார். கண்ணன் யசோதையிடம் காதில் திரியிட்டால் அது வீங்கும். அதோடுமட்டுமில்லாமல் எரிச்சலும் உண்டாகும். இதனால் சிரிக்கும் பெண்களுக்கும், உனக்கும் என்ன நஷ்டம்? எனக்கல்லவோ வலி? என்று எட்ட நின்றே கூறுகின்றான். யசோதை உடனே, உனக்கொரு நோவென்றால் அது எனக்கல்லவா! இளம்பிராயத்தில் இதைச்செய்தால் உனக்கு நோவு உண்டாகும் என்று அப்போது பெருக்காமல் இப்போது திரியிடுகிறேன். இது என் குற்றமா சொல்? இருடீகேசா! கொழுத்த விருடபாசுரனை அழிக்க கன்றாய் நின்ற அசுரனை விளாமரத்தில் விட்டெறிந்தவனே! இடைச்சேரியில் உள்ள எல்லா இடைப்பிள்ளைகளும் காதுகளை வளர்த்துத் திரிவதையும் நீ காணவில்லையோ என்று பதிலளிப்பதாகப் பாசுரமிடுகிறார். இதில் ஏர்விடை செற்று இளங்கன்று எரிந்திட்ட என்பதனால், ஏன் கடிப்பை எறிந்துவிட்டாய்? இது வத்ஸாஸுரர்களைப்போல அசுரனும் இல்லையே என்ற பொருளைத் தோன்ற வைத்தது அழகு!

பதினொன்றாம் பாசுரத்தில் பற்பநாபா! என்ற விளியை ஆழ்வார் இடுகிறார். நீ அவர்களை அன்புற்று நோக்குவதை அவர்கள் தெரிந்து கொள்ளும்படிக் குளிர உன் திருக்கண்ணை அவர்கள் கண்களோடு முதலில் கலந்து, அவர்களின் அங்கங்களையும் மணிகளையும் எல்லாம் உற்று நோக்கி, வாசனையை வீசுகின்ற புஷ்பங்களை அணிந்த கூந்தல் உடைய காரிகைகளின் மனத்துக்குள்ளே எப்பொழுதும் போக்யமாய் உள்ள மஹாபுருஷனே! எங்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்யமானவனே! என்று யசோதை அருளுவதாகப் பாசுரத்தைத் தொடங்குகிறார். யசோதாய், நீ உண்பதற்கு அமுதானதானதும், போக்யமானதானதும் ஆன பலவகைப் பழங்களை நான் கொடுப்பேன். காதணியை கொஞ்சமும் நோவாதபடி உன் திருக்காதுகளுக்கு அலங்காரமாக்குவேன். சகடத்தை அதன் அமைப்பு குலையும்படி திருவடியால் தூரத்தில் தள்ளிய பத்மநாபனே! இங்கே வாராய் என்று அழைக்கிறாள்.

---

## க்ருதஜ்ஞதை ஸமர்பணம்

கடந்த ஐந்து ஆண்டுகளாக கௌரவ கைங்கர்யம் செய்துவரும் **தேஶிக ஸந்தேஶம்** இதழின் ஆசிரியர் குழுவுக்கும் கீழ்க்காணும் கட்டுரை ஆசிரியர்களுக்கும் தேவஸ்தானம் தனது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்கிறது:

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் வாஸுதேவாசார்ய ஸ்வாமி, திருவநந்தபுரம்

ஸ்ரீ உ.வே. பழவேரி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஸ்ரீ ஸுஜாதா தேசிகன், பெங்களூரு

ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

ஸ்ரீமதி பத்மலதா ஸ்ரீதரன், சென்னை

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன், சென்னை

ஸ்ரீமதி வஸுமதி S. ராஜன், பெங்களூரு

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

ஸ்ரீமதி இந்திரா ரமேஷ், பெங்களூரு

ஸ்ரீமதி மாலதி ராகவன், சென்னை

தாமோதரா! என்ற பன்னிரண்டாம் திருநாமத்தை அமைத்து பன்னிரண்டாம் பாசுரத்தை அருளுகிறார் பெரியாழ்வார். எம்பெருமான் மீண்டும் யசோதையைப் பார்த்து கடிப்பிட்டால் எனக்கல்லவோ கஷ்டம் என்ற பொருளில் பேச ஆரம்பிக்கிறான். அன்னையே! நோவாமல் கடிப்பிடுவேன் வா! என்று அழைத்துக் காதணியை என் காதுகளில் அக்காது நோவும்படியாக வலிமையாக அழுத்துவாய்; அப்போது நோவில் துடிக்கும் என் கைகளையும் பிடித்துக்கொள்வாய் ஆகையால், எனக்கே எல்லா நோவும் ஏற்படும்; உனக்கென்ன ஒரு துன்பமுமில்லை. நான் அந்தத் துன்பத்தைத் தாங்கவல்லவன் அல்லேன் என்று கூறுகிறான். யசோதை இவ்வளவு தூரம் இரங்கி வந்து நம்மிடம் பேசுகிறானே என்று மகிழ்ந்து, நம்பீ! (குணபூர்ணனே!) என்று அழைத்து முன்னம் இதைவிட நோவை ஏற்படுத்திய இரண்டு கார்யங்களைச் செய்தாயே! அது உனக்கு நினைவில்லையா? என்ற பொருளில், வஞ்சனையுடன் வந்த பூதனை என்னும் அரக்கியை மாண்டு போகும்படி அவளின் முலைப்பாலை புசித்த, சகடாசுரனை அவன் முறியும்படி காலைப் பரப்பிய தாமோதரனே! உனக்கு இஷ்டமான நாவற்பழங்களை என்று முன்னமே கொண்டுவந்திருக்கிறேன் என்று அவற்றைக்காட்டி இங்கே வா! வந்து இவைகளைப் பார் என்று அவன் அருகில் வருவதற்கு ஒரு காரணத்தைக் கற்பித்துக் கூறுவதாகப் பாசுரமிடுகிறார்.

இப்படி பன்னிரண்டு பாசுரத்திலே எம்பெருமானின் பன்னிரண்டு திருநாமங்களையும் இட்டு அப்பாசுரங்களையும் அந்தாதியாய் இட்ட பெரியாழ்வார் பதிமூன்றாம் பாசுரத்தில் இப்பாசுரங்களுக்குப் பலன் சொல்லித் தலைக்கட்டுகிறார். யசோதையானவள் தன் மகனாய் நின்ற திருமாலை, அவனது நீண்ட காதுகளைத் தாழ்த்தி, வளர்த்தி, குழையிடலாம்படி செய்து, மகரக்குழை இடுவதற்காக சிறப்பித்துச் சொன்ன சொற்கள், மனத்தில் நிலை நின்று விளங்கும் படியாக, தொல்புகழுடைய ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு நிர்வாஹகனாக பெரியாழ்வார் இட்ட பன்னிரண்டு பாசுரங்களில் முறையே பன்னிரு திருநாமங்களை வைத்துப் பணித்த அந்தாதி தொடரான இந்த ஆராவமுதத்தை அநுஸந்தித்து வல்லராகுவர், எம்பெருமானுக்கு என்றும் அடியவராய் இருப்பர் என்று பலன் கூறினார்.

ஆக இத்தசகத்தை (இப்படிப் பொருளறிந்து) அனுஸந்திக்கும் நாமெல்லாரும் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமைசெய்ய ப்ராப்தமாகும் என்ற ஒப்பற்ற வரத்தை அருளிய பெரியாழ்வாருக்குப் பல்லாண்டுபாடி அடுத்த இதழில் எம்பெருமானை யசோதை திருமஞ்சனமாட்ட அழைக்கும் அடுத்த பருவப் பாசுரங்களை அனுபவிப்போம்.

*(தொடரும்...)*

## Thanks giving

The Devasthanam records its sicere thanks to the following who have supported Desika Sandesam by sponsoring the temple's monthly newsletter over the last five years:

**Names of the Sponsors**

Akshara Paly School

Atithya Homes, Thiruvanmiyur

Carnatica Archival Centre for Music & Dance

Dr. Kannan & Smt. Padmaja Kannan

Sri K. Gopala Desikan

Sri K. Vasudevan

Kimsuka Narasimhan & N. Seshadri Family

Kozhiyalam Family -
In memory of Sri K. Srinivasan

LVN Catering

Sri N.R. Raghavachariar, Mandavelipakkam

Smt. Priya & Sri T.R. Murali, Bangalore

Sri Purisai (Mani) Rangachariar Family

Smt. Pushpa Narsimhan &
Sri S. Narasimhan & Family

Sri R. Kalyanasundaram, Neelankarai

Sri R. Rajagopalan, Eyetex

Ramcons

S.P. Ramaswami - Karpagavinayar Film Circuit

Sri Sevilimedu Raghavan

SRI V.C. Muralidharan, Bengaluru

Sri R. Parthasarathy, Nanganallur

Sri S. Rangarajan

Sri Sridhar Parthasarthy & Family

Sri Thirukallam Chakravarthy Padmanabhan

TVS Motor Company Limited,
Jayalakshmi Estate

Sri V.A. Raghu Family

ஸ்ரீ:

# அடியேன் என்பது யாதெனின்...

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

ஸ்ரீவைஷ்ணவம் உபதேசிக்கும் உயர்வற உயர்நலமுடைய விஷயங்களுள் **நைச்யாநுபாவம்** தலையாயது. தான் அசக்தன். தான் அபேக்ஷிப்பதனால் ஏதும் நடப்பதில்லை. எம்பெருமான் ஒருவனே ஸர்வசக்திமான். அவனது ஸங்கல்பமே ஸத்யம் என்பதை உணர்ந்து, தனது ஆகிஞ்சந்யத்தினையும் அநன்யகதித்வத்தினையும் வெளிப்படுத்துவது நைச்யாநுபாவம். இதற்குச் சிறந்த உதாஹரணம், ஸ்ரீவைஷ்ணவர்களிடையே வழக்கத்தில் உள்ளதும் ப்ரபலமானதுமான **அடியேன்** எனும் சொல். புருஷர்கள் **அடியேன்** என்று தமது கீழ்மையினை பறைசாற்ற, ஸ்ரீவைஷ்ணவ ஸ்த்ரீகள் **அடியாள்** என்று தம்மைத் தாழ்த்திக் கொள்வது சஹஜம். இங்கு கீழ்மை / தாழ்ச்சி என்பது, எம்பெருமான் முதலான ஆசார்ய பரம்பரைக்கு அடிமைப்பட்ட ஜீவன் எனும் பொருள் கொள்கிறது.

தான் தாழ்ந்தவன் என்பது மனிதர்களால் எளிதில் ஏற்றுக் கொள்ள முடியாத விஷயம். தனது ஜனக்கட்டு, த்ரவ்ய பலம், தேஹ பலம் ஆகியவற்றைக் கொண்டு தான் ஆசைப்படும் அனைத்தையும் எல்லா காலத்திலும் தன்னால் அடைய முடியும் என்ற எண்ணம் மேலோங்கியவன் சேதனன். இத்தகைய அஹங்கார மமகாரங்களே உயர் ஜ்ஞானம் அடைவதனைத் தடுக்கும் விரோதிகள் என்பதனால், நான் எனும் அஹம்பாவத்தினை மழுங்கச் செய்யும் அஸ்த்ரமே **அடியேன் தாஸன் / அடியாள் தாஸ்யை (தாஸபூத்யை)** போன்ற சொல்லாடல்கள்.

**அடியேன்** எனும் பதத்தினை ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் பல்வேறு இடங்களில் காணலாம். அவற்றில் சில பாசுரங்களில் அந்வயித்து, **அடியேன் / அடியாள்** என்பது உண்மையில் எதைக் குறித்தது? பெயர் கொண்ட தேஹத்தையா இல்லை தேஹ விசிஷ்டமான ஆத்மாவையா என்று விசாரம் செய்வோம்.

**இடரென்பது ஆத்மாவிற்கா தேஹத்திற்கா?**

திருமங்கை ஆழ்வார் தனது பெரிய திருமொழியில் **திருவெள்ளக் குளத்துள் அண்ணா, அடியேனிடரைக் களையாயே!** (4-7-1) என்றும், திருவெள்ளக்குளத்து எம்பெருமானைத் தனது தந்தையாய்க் கொண்டு, **எந்தாய், அடியேனிடரைக் களையாயே** (4-7-2) என்றும், குன்றமேந்திக் குளிர் மழைக் காத்தவனிடம் **திருவெள்ளக் குளத்துள் நின்றாய், நெடியாய்! அடியேனிடர் நீக்கே** (4-7-3) என்றும் மன்றாடுகிறார்.

இங்கு திருமங்கை மன்னன் கூறும் இடர் என்பது தேஹ ஸம்பந்தமானதா அன்றி ஆத்மா ஸம்பந்தப்பட்டதா என்பது விசாரம். ஆழ்வார்பிரான் பரமபாகவதோத்தமர் என்பதனாலும், எம்பெருமானின் சார்ங்க அம்சம் என்பதனாலும் இங்கு ஆத்மா ப்ராதாந்யம் பெறுகிறது. தேஹம் வேண்டாம். பிறவி வேண்டேன். மோக்ஷமாகிய உன் திருவடி ஒன்றே வேண்டும் என்ற ஆழ்வாரின் ப்ரதிஜ்ஞையினை உணர்த்தும் பதங்கள் **அடியேனிடர் நீக்கே.**

இந்தப் பாசுரத்தில் அடியேனிடர் நீக்கே என்பது ஆத்மா கரைசேர்வதற்கு உண்டாகும் இடர்களை மட்டுமே குறித்தது என்றபோதும், (பொதுவாக) தான் என்பது அநித்யமான தனது தேஹமே என்று நினைத்து வாழும் ஜ்ஞானஹீனர்களான கர்மபத்தர்கள் விஷயத்தில், அடியேனிடர் நீக்கே என்பது தேஹம் ஸம்பந்தமான இடர்களை (மட்டுமே) குறிக்கிறது.

**அந்தர்யாமி - ஆத்மாவினுள்ளா தேஹத்தினுள்ளா?**

*கண்கள் சிவந்து பெரியவாய் வாயும்*
*சிவந்து கனிந்து உள்ளே*
*வெண் பலிலகு சுடரிலகு விலகு மகர குண்டலத்தன்*
*கொண்டல் வண்ணன் சுடர்முடியன்*
*நான்குதோளன் குனிசார்ங்கன்*
*ஒண் சங்கதை வாள் ஆழியான்*
*ஒருவன் அடியேன் உள்ளானே.*

(திருவாய்மொழி 8-8-1)

இந்தப் பாசுரம் பெருமானின் திருமேனி அழகினை வர்ணிக்கிறது. இறுதியில் **அடியேன் உள்ளானே** என்பதனால், இப்படிப்பட்ட அழகிய கம்பீரமான திருமேனியினை உடைய எம்பெருமான் தன்னுள் நிறைந்துள்ளான் என்கிறார் ஆழ்வார். இங்கு தன்னுள் என்று ஆழ்வார் கூறுவது அவரது தேஹத்தினுள்ளா ஆத்மாவினுள்ளா என்பது விசாரம். இதற்கு பதிலாக அமைகிறது அடுத்ததாக வரும் பாசுரம்.

*அடியேன் உள்ளான் உடல் உள்ளான்*
*அண்டத்தகத்தான் புறத்துள்ளான்*
*படியயிதுவென்றுரைக்கலாம் படியனல்லன் பரம் பரன்*
*கடி சேர் நாற்றத்துள்ளாலை*
*இன்பத் துன்பக் கழி நேர்மை*
*ஓடியாவின்பப் பெருமையோன்*
*உணர்விலும்பர் ஒருவனே.*

(திருவாய்மொழி 8-8-2)

**அடியேன் உள்ளான் உடல் உள்ளான்** என்று கூறி, எல்லாக் காலங்களிலும் அண்ட சராசரங்களுக்கும் ஆத்மாவாய் விளங்குபவனான எம்பெருமான் ஹேயமான தனது தேஹத்தினுள்ளும் ஆத்மாவிலும் நிறைந்துள்ளான் என்கிறார். இங்கு ஆழ்வார் **அடியேன்** என்றது தேஹ விசிஷ்டமான ஆத்மாவையே.



**விண்ணப்பிப்பது ஆத்மாவா தேஹமா?**

*பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்*
*இந்நின்ற நீர்மை இனி யாமுறாமை உயிரளிப்பான்*
*எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா!*
*மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே.*

நம்மாழ்வாரின் ப்ரதம ப்ரபந்தமாகும் திருவிருத்தத்தின் முதல் பாசுரமே, அநாதி ஜன்மாதிகள், கர்மாக்கள், அவித்யை நிறைந்த தனது அவல நிலையினை எம்பெருமானிடம் ஆழ்வார் விளக்குவதாக அமைகிறது. தேவாதி தேவர்களுக்கெல்லாம் தலைவனானவனே! அடியேன் செய்யும் இந்த விண்ணப்பத்தினை தயை கூர்ந்து கேட்டருள்வாய் என்கிறார் ஆழ்வார். இங்கு **அழுக்குடம்பும்** எனும் பதம், கர்மாக்களைக் கழிக்கவென உண்டான தேஹத்தின் மூலமாக (பஞ்சேந்திரியங்களை உபயோஹித்து) எம்பெருமானிடம் ஆத்மா விஜ்ஞாபிப்பதை உணர்த்துகின்றது.

**ஆத்மாவிற்குப் பசி உண்டா?**

*கண்ணா! நான்முகனைப் படைத்தானே! காரணா!*
*கரியாய்! அடியேன் நான்*
*உண்ணா நாள் பசி ஆவது ஒன்று இல்லை ஓவாதே*
*நமோ நாரணா என்று*
*எண்ணா நாளும் இருக்கு எசுச் சாம வேத நாள்மலர்*
*கொண்டு உன பாதம்*
*நண்ணாநாள்! அவைதத்துறுமாகில் அன்று எனக்கு*
*அவை பட்டினி நாளே.*

(பெரியாழ்வார் திருமொழி 5-1-6)

ச்ருஷ்டிகார்ய கர்த்தாவான ப்ரஹ்மனையே படைத்தவன் எம்பெருமான். அத்யந்த பரதந்த்ரனாம் அவனிடம் ஆழ்வார் தனது பட்டினியினைப் பற்றிக் கூறுகிறார்.

அனைத்திற்கும் காரணகர்த்தாவாக இருப்பவனே! என் கண்ணனே! ஆஹாரம் உண்ணாத நாட்களில் பசி என்பதை அடியேன் உணர்ந்தேனில்லை. எனினும், ப்ரணவாகாரத்தினையும் த்வயத்தினையும் அநுஸந்திக்காத நாளே அடியேனுக்கு நிஜமான பட்டினியாகிறது என்கிறார் ஆழ்வார்.

பொதுவாக, நம்மைப் பொறுத்தவரை பட்டினி என்பது தேஹம் ஸம்பந்தப்பட்ட லோகாயதமான ஒரு விஷயம். அதனை ஆத்மா ஸம்பந்தப்பட்ட விஷயமாக இங்கு ஆழ்வார் காண்பிப்பதன் மூலம், ஆத்மாவிற்கும் பசியுண்டு. அதனைத் தீர்ப்பதும் நமது (முக்யமான) கடமை என்பது நிஷ்கர்ஷம் ஆகிறது. அத்தோடு, தேஹத்தின் தேவைகள் அநித்யமானவை. இந்த்ரிய ஸம்பந்தத்தால் உண்டாவது. ஆனால், ஆத்மாவின் தேடல் அதீதமானது. த்ருடமானது. சாச்வதமானது. அதனை அறிவதென்பது எம்பெருமானின் க்ருபையினாலேயே அமையப் பெறும். இங்கு ஆழ்வார் தேஹபூர்வகமாக உண்டாகும் தனது பசியானது பசியே இல்லை. தேஹவிசிஷ்டமான ஆத்மா கொள்ளும் பசியே உண்மையான பசி என்று தெரிவித்து ஆத்மாவின் நிஜமான ஸ்வரூபத்தினைக் காட்டுகிறார்.

## ஸ்ரீ தேசிக மொழி

என் திருமாலே! உன்னுடைய கருணையைத்தவிர வேறு கதியற்றவனாய் இருக்கிறேன். நெடுங்காலமாகப் பிழைசெய்து வந்த நிலைமை இப்பொழுது கழியப்பெற்றேன். உன் க்ருபையைப் பெறுவதற்குத் தக்க நல்ல ப்ரபத்தி மார்க்கத்தை விரும்பினேன். உன் திருவடியே வழி என்னும் உறுதியைப் பெற்றேன். அஜ்ஞானமயமாய் இருந்த நிலைமையைப் போக்கி வைத்து அநந்த கருட விஷ்வக்ஸேனாதிகளின் வாழ்வை அடியேனுக்கும் தரும்படி உன்னை வேண்டிநின்றேன். எனவே எம்பெருமானே! உன்னுடை இனிய கருணையினால் இனிமேல் எனக்கு ஒரு பொறுப்பும் வைக்காமல் நீ என்னை காக்க வேண்டிய பொருளாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**ஸார ஸங்க்ரஹம்**

பசியென்பது ஆத்மா, தேஹம் இரண்டிற்கும் உண்டு. வித்யாஸம் என்னவெனில், தேஹம் கொள்ளும் பசியானது கர்மபத்தர்கள் இந்த்ரியங்களால் ஆளப்படுவதைக் காட்டும். ஆத்மாவின் பசியானது கர்மபத்தர்களை அவர்களது தளைகளிலிருந்து விடுவிக்கும் உபாயமாகிறது.

**அருள் பெறுவது ஆத்மாவா தேஹமா?**

*வற்றா முதுநீரொடு மால் வரை ஏழும்*
*துற்று ஆக முன் துற்றிய தொல் புகழோனே*
*அற்றேன் அடியேன் உன்னையே அழைக்கின்றேன்*
*பெற்றேன் அருள் தந்திடு என் எந்தை பிரானே!*

(பெரிய திருமொழி 7-1-2)

திருமங்கை மன்னனின் பாசுரமாகும் இதில், ப்ரபஞ்சமானது அழிந்து விடாதபடி ப்ரளய காலத்தில் உனது திருவயிற்றுள் அதனைக் கொண்டு ரக்ஷித்தருளின பிரானே. யார் அழைத்து அப்பொழுது நீ ப்ரபஞ்சத்தைக் காத்தருளினாய்? ப்ரபஞ்சத்தில் உள்ள சேதன, அசேதனங்களின் மேல் நீ கொண்ட எல்லையில்லாத (மாத்ரு) வாத்ஸல்யத்தினால் அன்றோ யாரும் அழைக்காமலே அன்று நீ வந்து ரக்ஷித்தாய். ஜன்ம ஜன்மாந்தரங்களாக நான் அநுபவிக்கும்வேதனையிலிருந்து என்னை ரக்ஷிக்கவா என்று கூவி அழைக்கிறேன். அடியேனது அபயக் குரல் கேட்டு பிராட்டியுறை உனது ஹ்ருதயம் இளகாதோ என்று ஆழ்வார் ப்ரஸ்தாவிப்பதாக அமைந்துள்ளது இந்தப் பாசுரம். இப்படி ஸேவித்து, சேதனர்களின் ஜீவிதமென்பது பகவததீன ஸ்வாதந்த்ரியம் மட்டுமே என்பதை ஊர்ஜிதப்படுத்துகிறார் ஆழ்வார்பிரான்.

உனக்கே நாமாட்செய்வோம் என்ற அர்த்தத்தினைக் கொள்கிறது **அற்றேன்** (அநந்யகதி - வேறு கதி இல்லாதவன்) எனும் பதம். இங்கு **அருள் தந்திடு** என்று ஆழ்வார் ப்ரார்த்திப்பது ஆத்மாவின் ரக்ஷணத்திற்கே என்பது திண்ணம்.

**அடியேன் என்பது ஆத்மாவையே**

*அடியேன் சிறிய ஞானத்தன் அறிதல் யார்க்கும் அரியானை*
*கடிசேர் தண்ணந்துழாய்க்கண்ணி புனைந்தான் தன்னைக் கண்ணனை*
*செடியார் ஆக்கை அடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை*
*அடியேன் காண்பான் அலற்றுவன் இதனில் மிக்கோர் அயர்வுண்டே.*

(திருவாய்மொழி 1-5-7)

முப்பது முக்கோடி தேவர்களும் சதுர் வேதங்களும் அறிய முடியாத எம்பெருமானை அடையத் துடிக்கும் ஆத்மாவிற்கு ஜ்ஞானம் உண்டு. அநித்யமான தேஹத்திற்கு ஜ்ஞானம் கிடையாது. **இதனில் மிக்கோர் அயர்வுண்டே** எனும் பதங்கள் ஆழ்வாரின் ஆத்மாநுபவத்தைக் காட்டியது.

**கர்மபத்தர்களை கரைசேர்க்கும் அடியேன்**

நமது கர்மாக்களைக் கழிக்கவென எம்பெருமானின் சொத்தான ஆத்மாவை அபஹரித்து வந்துள்ளோம். தேஹ விசிஷ்டனான ஆத்மா ஸ்வயமாக கர்மாக்களை அனுபவித்துக் கழிப்பதென்பது அஸம்பாவிதம் என்பதனாலும், தேஹத்தினால் மட்டுமே கர்மாக்களை அநுபவித்துக் கழிக்க முடியும் என்பதனாலும், எம்பெருமான் நமக்கு தேஹத்தினை அநுக்ரஹித்துள்ளான். ஜாதகர்மா, நாமகரணம் போன்ற விசேஷங்கள் மூலம் நமக்குச் சூட்டப்படும் பெயர் நமது தேஹத்திற்கேயன்றி, ஆத்மா எனும் சுத்தஸத்வ வஸ்துவிற்குப் பொருந்தாது.

**என்னை ஆள்வானே புகல் ஒன்றில்லா அடியேன் நிகரில் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே** என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழி, **அடியேன்** என்பதன் ஏற்றத்திற்குக் கட்டியம் கூறும். **அடியேன்** என்று ஒவ்வொரு முறை நாம் சொல்லும் போதும், நாம் எம்பெருமான் முதலான ஆசார்ய பரம்பரையினைக் கொண்டாடுகிறோம். **சரணமாகும் தன் தாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்** பீதகவாடைப் பிரானின் தொண்டர் அடிப்பொடி **அடியேன்** என்று சேஷத்வத்தினை அநுஸந்தித்து, ஆத்ம ஸமர்ப்பணம் (பரந்யாஸம்) செய்வோம். எம்பெருமானின் சொத்தான ஆத்மாவிற்கு பலம் சேர்ப்போம்.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners ②

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter – 1: Upodhgaatha Adhikaram**

This is the first chapter of the treatise which sets out the contents like the subject matter, who it is meant for, etc.

Sriman Narayana wears a pendant called Kausthubha which denotes the Jeeva and hence the Jeeva -- the son, the servant, the slave -- is truly close to his heart.

He is entitled to reside in Srivaikunta along with Nithya Suris (those Jeevas eternally with him) and Mukthas (those Jeevas who have defeated the cycle of births and deaths)



The qualifying attribute of his soul is servitude (Seshatvam). He could serve Bhagavan in Vaikuntam eternally.

But he takes several births in this world and just like a gem which has lost its lustre he loses his wisdom and is immersed in Samsara. This is due to eternal "Maya".

This is illustrated in a very beautiful story by Swami Desikan.

Once upon a time a King went on a hunting trip to the forest accompanied by his queen and infant son.

The son lost his way and was adopted by some hunters. He grew up thinking of himself as a hunter and hence took up their living style. His speech, eating habits, clothes all reflected this. Like a parrot which repeats the words it hears, he mimicked a hunter's way of life, unaware of his actual position.

Years later, by a stroke of luck some Sadhus saw him and realised that he must be of high birth. They made him change his lifestyle and prepared him to become worthy of a princely life.

Then some courtiers came, advised him of his status, decked him up, introduced him to the King and facilitated his crowning as the Prince.

We are in the position of that prince, separated from Bhagavan, living in this world thinking it is ours and considering our bodies as us.

Actually, a Jeeva is neither a Deva, nor a Manushya, animal, nor a tree though he may have taken that form. The qualifying attributes of his soul are wisdom and bliss. (Gnanam and Aanandam).

By virtue of a good deed done eons ago, he comes in contact with an Acharya (by the blessings of Bhagavan) who imparts this knowledge to him. The Acharya educates the Jeeva about his eternal connection to Bhagavan and sets him upon the right path.

There are six causes which enable a Jeeva to beget an Acharya. Bhagavan's well-wishing (Easwara Souhardham), an accidental Punyam (Yaddrucha Sukrutham), Divine glance (Vishnu Kataksham), non-hate towards Perumal (Adhvesham), being receptive to Perumal (Aabhimukhyam) and conversations with Saathviks.

The Acharya teaches him (like how a cow feeds a new-born calf without waiting for it to moo), all the concepts, Thathvas, Svarupa, Svabhava, Sambandha of all beings, experiences here and above, do-s and don't-s, path to Moksha, impediments to it, and so on without any misconception or misinterpretation.

All these are encapsulated in Rahasya-thraya -- the Astaksharam, Dvayam and Charama Slokam in the form of a concept unique to our Sampradayam, namely, Sarira-Athma Bhavam.

In every chapter Swami Desikan sets out the subject matter in a Sanskrit Sloka in the beginning of the chapter and the essence in Paasurams at the end of the chapter. The first 22 chapters are called "Arthanusaasana Bhagam" meaning that which are to be learnt and adhered to.

***(to be continued…)***



*With Pranams:*

**R. Parthasarathy & Family,**

Nanganallur, Chennai 600 061.

Mobile: 94440 06719.

**SVDD thanks Sri R. Parthasarathy & Family**

for sponsoring this month's issue of Desika Sandesam





## ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம்








ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம்

